C.C319/16

PW 1

பெயர் பால்பாண்டியன்

தேதி 25.03.2019

2ம் எதிரி தரப்பில் தரப்பில் கு.வி:

போலிசார் என்னை விசாரித்தார்கள். புகார் மற்றும் போலிஸ் விசாரணையில் 1,2 எதிரிகள் ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருவதாக கூறியுள்ளேன். இரண்டு எதிரிகள் என்னிடம் வீட்டு பத்திரத்தை வாங்கி ராஜா மற்றும் தேனிமொழியில் கொடுத்ததாக நான் முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதுபோல் தான் புகார் மற்றும் போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 13லட்சத்தை என்னிடம் இருந்து பெற்றுக்கொண்டார்கள் என்று நான் புகார் மற்றும் போலிஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் கூறியுள்ளேன். தேனி மாவட்ட எஸ்பியிடம் புகார் கொடுத்தை நான் புகார் மற்றும் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். கடையில் இருந்தால் மண்ணெணய் ஊற்றி கொன்று விடுவோம் என்று நான் புகார் மற்றும் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் மண்ணெணய் ஊற்றிகொன்றுவிடுவதாக சொல்லவில்லை. கொன்றுவிடுவதாக மட்டும் சொல்லியுள்ளேன். மாவட்ட குற்றபிரிவு , டிஎஸ்பியிடம் புகார் கொடுத்ததாக நான் புகார் மற்றும் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த புகாரின் நகல்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த புகார் தான் பார்வேடு செய்யப்பட்டு வந்தது. அந்த புகார் தான் இது என்றால் சரியல்ல. இது வேறு புகார். மொத்தம் 4 புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல 3 புகார் கொடுத்துள்ளேன். இந்த புகார் கொடுப்பதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு மற்ற புகார்கள் கொடுக்கப்பட்டது என்றால் ஒரு மாதத்திற்குள் கொடுக்கப்பட்டது. யாருடைய விசாரணையில் எதிரிகள் கலந்துக்கொண்டார்கள் என்றால் எஸ்பி அலுவலக விசாரணையில் கலந்து கொண்டார்கள். டிஎஸ்பி அலுவலகத்திலும் விசாரணையில் சீனிவாசன் கலந்துக்கொண்டார். தன் விசாரணையின் போது எதிரி கண்ணன் சொன்னால் பணத்தை திருப்பிதருவதாக கூறினார். கண்ணன் ஒரே தடவை தான் விசாரணையில் கலந்துக்கொண்டார். அசாஆ2 முதல் அசாஆ.5 ஆவணங்களையும் 3 விசாரணையின் போது நான் அதிகாரிகளிடம் காண்பித்தேன் என்றால் சரிதான். என்னிடம் ஆவணங்கள் இருப்பதால் சிவில் வழக்காக போட்டுக்கொள்ளும்படி கூறினார்கள் என்றால் சரியல்ல. கோடாங்கிபட்டி தேன்மொழி, ராஜா ஆகியோர்கள் என்னை

ஏமாற்றிவிட்டதாக நான் யாரிடமும் சொல்லவில்லை என்றால் சரிதான். அவர்கள் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் 2009ல் இருந்து நானும் கண்ணனும் மரக்கடையை நடத்தி வருகிறோம். அதற்கு முன்பாக கண்ணன் அதே கடையை தனியாக நடத்தி வந்தார். கடையை நிர்வாகம் செய்வது நான் தான் என்றால் சரிதான். கண்ணன் தச்சுவேலை மட்டும் செய்து வந்தார் என்றால் சரிதான். வரவு செலவு கணக்கை பார்கக் கணக்கு பிள்ளை தனியாக உள்ளார். அவர் பெயர் மோகன். நான் நிர்வாகம் செய்து வந்ததால் பணம் முழுவதும் என்னிடம் இருக்கும் என்றால் சரிதான். தற்போது சாட்சி தினமும் மாலையில் பணத்தையும் கணக்கையும் கண்ணனிடம் ஒப்படைப்பேன் என்று சொல்கிறார். இந்த வழக்கு சம்பவத்தை தவிர எனக்கும் சீனிவாசனுக்கும் வேறு தொடர்பு இல்லை என்றால் சரிதான். 2010ல் பவர் எழுதிக்கொடுத்து நான் 15லட்சம் பணம் வாங்கினேன் என்றால் பவர் எழுதிக்கொடுத்தேன். பணம் வாங்கவில்லை. தற்போது சாட்சி என் தம்பி தங்கராஜ் தான் பவர் கொடுத்தார் என்று கூறுகிறார். என்னிடம் காண்பிக்கப்படும் பவர் ஆவணத்தில் உள்ள போட்டோ என்னுடையது அல்ல என் தம்பியுடையது அதில் உள்ளகையெழுத்து மறறும் கைரேகை என்னுடையது அல்ல. அந்த ஆவணம் சான்றிட்ட நகல் எமசாஆ.1. சாட்சி தற்போது என் தம்பியும் நானும் தான் பவர் எழுதிக்கொடுத்தாக கூறுகிறார். அந்த பவர் ஆவணம் ரத்து செய்யப்பட்டதாகவும் கூறுகிறார். எமாசஆ1ஐ நான் ஆள்மாறாட்டம் செய்து 1வது எதிரியிடம் கொடுத்து 15லட்சம் பணம் ஏமாற்றம் செய்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என் தம்பி தங்கராஜ் எனக்கு தானசெட்டில்மெண்டாக எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான் அதன் சான்றிட்ட நகல் எமசாஆ2. எமசாஆ2 ல் உள்ள தங்கராஜ் புகைப்படம் என் தம்பிக்குரியது என்றால் சரிதான். 29.2.2012ம் தேதி தேன்மொழிக்கு ஒரு பவர் பத்திரம் நான் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதில் நான் , என் தம்பி தங்கராஜ், அண்ணன் ராஜேந்திரன் சேர்ந்து எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான். அதன் சான்றிட்ட நகல் எமசாஆ3. எமசாஆ3ல் உள்ள பால்பாண்டி என்ற புகைப்படம் என்னுடையது என்றால் இல்லை. நான் அன்றைய தினம் புகைப்படம் கொண்டு செல்லவில்லை என்பதால் என் தமபியின் புகைப்படத்தை ஒட்டியுள்ளார்கள். நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எமசாஆ3ல் என் தம்பி, என் அண்ணன் மற்றும் என் புகைப்படம் உள்ளது என்றால் சரிதான்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**